# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 31 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 31


## கர்த்தாவே, ஜெபிக்க கற்றுத்தாரும்

(மத்தேயு 6 : 9 – 13ல் சொல்லப்பட்டுள்ள கர்த்தருடைய ஜெபத்தைக் குறித்து இந்த இதழில் பார்க்க உள்ளோம்)

லூக் 11 ம் அதிகாரத்தில், இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் தங்களுக்கு ஜெபம்பண்ண போதிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதுதான் கர்த்தர் கற்பித்ததும் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளதுமான கர்த்தருடைய ஜெபம். நாம் பின்பற்ற வேண்டிய ஒன்று தேவனுடைய குமாரனாம் இயேசுகிறிஸ்துவே எவ்விதமாக நம்முடைய ஜெபம் இருக்க வேண்டும் என்று நமக்குத் தரப்பட்ட மாதிரி ஜெபத்தின்படி, நம்முடைய இருதயத்தை தாழ்மையாய், தேவனுடைய பரிபூரண சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, அர்ப்பணிப்போடும் முழு நம்பிக்கையோடும் ஜெபிப்போமாக இனிமேல் இவ்வாறாக நாமும் ஜெபிப்போம்.

**“எங்களுடைய பிதா” சொந்த உறவு** கர்த்தருடைய ஜெபமானது பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று ஆரம்பிக்கும் போது பிதாவுக்கும் மனுக்குலத்திற்குமான உறவை அது குறிக்கிறது. அப்பா என்கிற அன்பும், நாம் அவருடைய சொந்த பிள்ளைகள் என்கிற நம்பிக்கையும் தருகிறது. ராஜாவினால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகள். நாம் என்பது பன்மை அது ஒற்றுமையையும் தேவன் புறஜாதியாருக்கும் தகப்பனாயிருப்பதையும் காட்டுகிறது நாம் அனைவரும் ஆவிக்குரிய சகோதர சகோதரிகளே.

**பரமண்டலங்களிருக்கிற எங்கள் பிதா – விசுவாசம் / அங்கீகாரம்** எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல தேவன். நாம் விசுவாசிக்கிற தேவனிடத்திலே ஜெபம் ஏறெடுக்கிறோம். உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக – அர்ப்பணிப்பு / மகிழ்ச்சி / ஆராதனை. பரிசுத்தம் என்பது தூய நிலையைக் குறிக்கும். ஜெபத்திலே நம் முழு இருதயத்தோடும் எண்ணங்களோடும், தெய்வீக வழி நடத்துதலை வாழ்வின் ஒவ்வொரு தருணங்களிலும் நிலைப்படுத்தும் வார்த்தைகளும் ஆவிக்குரிய பரிசுத்த ஜீவியத்தில் உறுதியாய் தரித்திருப்பவர்களுமாய் இருப்பதற்கு ஜெப நேரம் உதவியாய் இருக்கும். ஜெபத்திலே வேண்டுதல்களை முதலாவது சொல்லி ஆரம்பிக்க கூடாது மாறாக தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு நன்றி சொல்லி ஜெபிக்க வேண்டும்.

**உம்முடைய இராஜ்யம் வருவதாக முன்னதாகவே தெரிந்திருத்தல்,** எதிர்பார்ப்பு அவருடைய வருகையையும் அவர் நம்மோடு இருப்பதையும் எதிர்பார்த்து நாம் கூறும் வேண்டுகோள். இது சாத்தானின் வலிமையை மேற்கொள்ளும் அதிகாரமும் தேவனுடைய ஆளுகையை நம் வாழ்வில் பெற வேண்டியும் வேண்டுதல் செய்யும் வார்த்தை அது. தேவனுடைய ராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல அது சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோமர் 14 : 17). கிறிஸ்துவினுடைய இராஜ்யம் ஆவிக்குரிய இராஜ்யம் அது நம் ஒவ்வொருவருக்குள்ளும் உள்ளது.

**உம்முடைய சித்தம் பரமண்டத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக அர்ப்பணிப்பு / அபிஷேகம்** பரலோகத்திலே பரிபூரணமான தேவனுடைய சித்தம் நிறைவேற்றப்படுவது போல, சாவுக்குரிய இந்த நிலையற்ற சரீரத்தின் திட்டங்களையும், விருப்பங்களையும் தேவனுடைய கரங்களில் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம். கெத்சமனே தோட்டத்திலே இயேசு இவ்வாறே ஜெபித்தார் பிதாவே என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது



**“இதுவரை எழுதப்பட்ட மிகச்சிறந்த, தலையாய ஜெபம் அதுவே நாம் பின்பற்ற வேண்டிய ஒன்று”**


**தலையங்கம்** சாப்பிடும் நேரத்தில் ஜெபம் பக்கம் - 3


**வேதபாட வழிகாட்டி** ஜெபம் பக்கம் - 4

**ஒருநோக்கு செய்தி** ஜெபம் எனும் கோட்பாடு பக்கம் 5

**கேள்விக்கு என்ன பதில்?** பக்கம் - 7

**உங்களுக்குத் தெரியுமா?** ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை பக்கம் - 8

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21; மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23, 1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4, எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16; தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6; 1 கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28; வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30; 1 கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3; 1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15; உபா 22 :5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28,29; 2 கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5 :19; 2 கொரி 3 :17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16:15

நம்முடைய ஜெபமும் கூட இப்படித்தான் அர்ப்பணிப்பு நிறைந்ததாய் இருக்க வேண்டும். நாமும் நம்மைச் சேர்ந்த ஒவ்வொன்றும் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்.

**எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத்தாரும்** – வேண்டுதல் தேவனை ஆராதித்து நம்மை ஒப்புக்கொடுத்து ஜெபித்த பின்பு நம் வாழ்வின் அன்றாட தேவைகளுக்காகத் தேவனை நோக்கிப் பார்ப்போம். எங்களுக்கு வேண்டியவற்றையும் தேவ பக்தி நிறைந்த அர்ப்பணிப்புள்ள வாழ்வையும் தாரும். மாம்சீகமான ஆகாரத் தேவையை மாத்திரமல்ல, ஆவிக்குரிய கிருபை வரங்களையும், நம்முடைய பெலவீனங்களிலே பெலனையும் அடையும் வலிமையையும் இந்த ஜெபம் உள்ளடக்கியது.

**எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும் - குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல் / பரிந்துரை**

நாம் தேவனுடைய மன்னிப்பை பெற தகுதியுள்ளவர்களா என்பதை விட தேவன் நமக்காக மன்னிப்பை அருளிச்செய்ய ஆவலாய் இருக்கிறார். நம்முடைய பாவங்களையும் குற்றங்களையும், மன்னிக்க தயை பெருத்தவர். நாம் மனுஷனாய் இருக்கிறபடியால் நம்முடைய மாம்ச இச்சைகளில் நாம் இடறி பாவம் செய்வோமானால் அதில் நம்மை நாமே சோதித்து அறியக்கடவோம். பாவமன்னிப்பின் ஜெபம் நம்முடைய ஜெபத்தோடு அனுதினமும் ஒன்றாக சேர்ந்து ஜெபிக்கப்பட வேண்டும். தானியேல், இஸ்ரவேலின் மீட்புக்காக தேவனிடத்தில் குறுக்கிட்டு மன்றாடினது போல நாமும் பாவங்களை அறிக்கையிட வேண்டும்.

> **“கிறிஸ்தவ ஜீவியப் பாதையிலே ஜெபம் என்பது மிக உயர்ந்த அனுபவம்”**

**நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோம் - இரக்கம் / மன்னிப்பு**

நமக்கு துரோகம் செய்த ஒருவரை இரக்கம், காட்டி நாம் மன்னிக்கும் போது தான், கர்த்தரும் நமக்கு இரங்கி நம்மை மன்னிக்கிறார். நம் சகோதர, சகோதரிகளுடன் உள்ள உறவின் ஐக்கியம் சரியாக இருக்கும்போதுதான், தேவனுக்கும் நமக்குமான உறவு நன்றாயிருக்கும்.

**எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் வழி நடத்துதல்**

சோதனையும் ஆவிக்குரிய பயங்கரங்களும் ஏற்படுவது உண்மை. நாம் தேவனுடைய வழிகாட்டுதலின்படி செல்லும்போது சோதனை வரும். ஆயினும் அதனை ஜெயித்து பாவத்தை மேற்கொள்ளும் வலிமையை அது நமக்குத் தரும் தேவதயவை நாடி அவருக்கு கீழ்ப்படியும்போது, எல்லா தீங்கிற்கும் விலக்கி அவர் நம்மை பாதுகாப்பார்.

**தீமையினின்று விலக்கிக் காத்துக் கொள்ளும் - பாதுகாப்பு / சார்ந்திருத்தல்**

தீமையை மேற்கொள்ளும் வலிமை நமக்கு இல்லை. ஆனால் தேவனை சார்ந்து வாழும்போது தீமையை மேற்கொள்ளலாம். பிசாசின் தந்திரங்களையும், கண்ணிகளையும் மேற்கொண்டு, பாதுகாப்பாக வாழ அவர் நமக்கு உதவி செயவார்.

**இராஜ்யமும், மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே**

நாம் பெலவீனரும், குறைவுள்ளவர்களாயிருந்தும், கிறிஸ்து இயேசுவுக்குள் பெலவானாயிருக்கிறோம். எல்லா மகிமையும், வல்லமையும் அவர் ஒருவருக்கே உரித்தாகட்டும். அவரே எல்லாம் வல்ல தேவன். கர்த்தருடைய ஜெபமானது சிருஷ்டிகரான கர்த்தருக்குள் விசுவாசம், மனத்தாழ்மை, கனம் மற்றும் ஆராதனை இவைகளை வலியுறுத்தி முடியப்பெற்றுள்ளது.

**என்றென்றும் – சதாகாலங்களிலும்.** தேவனுடைய இராஜ்யம், இரக்கம், அன்பு இவைகளுக்கெல்லாம் முடிவே இல்லை

**ஆமென் – உறுதி.** அப்படியே ஆகட்டும்

ஜெபம் தேவனோடு உள்ள உறவின் திறவுகோல் 30 நொடிகளுக்கு குறைவான நேரத்தில் எப்படி ஏற்றுக்கொள்ளும்படியாக ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும் என கற்பித்திருக்கிறார். அது ஒரு நீளமான பெரிய ஜெபம் அல்ல. ஆயினும் இதயப்பூர்வமான அன்பும், துதியும், நம்முடைய தேவை மன்றாட்டும் அதில் அடக்கம். எளிதில் புரிந்து கொள்ள முடியாத பெருமையுள்ள அநேக வீடுகள் மற்றும் சபைக்கூட்டங்களில் ஏறெடுக்கப்படும் ஜெபங்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டு வல்லமையோடு ஜெபிக்கப்பட வேண்டிய கர்த்தருடைய ஜெபம் இது. கிறிஸ்தவ ஜீவியப் பாதையிலே ஜெபம் என்பது மிக உயரிய ஓர் உன்னத அனுபவம். ஆகையால் கர்த்தருடைய ஜெபத்தில் எழுதப்பட்டுள்ள வார்த்தைகளை மனப்பூர்வமாக அறிக்கையிட்டு நம்முடைய அனுதின ஜெப வாழ்வில் மன்றாடி ஜெபிப்போம். பிதாவே, ஜெபிக்கக் கற்றுத் தாரும்...

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# Editorial ஆசிரியரின் தலையங்கம்

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் – பிலி 4 : 6

உங்கள் ஜெபம் இப்படி இருக்க கடவது.ஏனெனில் ஜெபம்தான் எல்லாவற்றையும் மாற்றும்.தேவனிடத்திலிருந்து பதில் வரும்வரை ஜெபியுங்கள். ஜெபமே உங்கள் திறவுகோல். ஜெபத்தைக் குறித்த இந்த இதழைப் படிக்கும்போது என் இதயம் பாடல்களால் பரவசமடைகிறது. ஜெபம் என்பது கிறிஸ்தவர்களால் கடினமான ஒன்றாகவும், குற்றமனப்பான்மை யோடும் பார்க்கப்படுவதால் புறக்கணிக்கின்றனர்.ஆனால் தேவனுடைய பரிசுத்த ஆவியானவருடைய அந்நியோந்ய ஐக்கியமும் அன்பும் கிறிஸ்தவ ஜனங்களுக்குள் முதலாவது கிரியை செய்ய வேண்டுகிறேன். ஜெபம்தான் தேவனோடு உறவு கொள்வதற்கான பாலம் என உணரட்டும் . தேவனை துதிப்பதற்கும், நம்முடைய பாரங்களை ஊற்றுவதற்கும், நம்மேல் அன்புகாட்டும் ஒரு தகப்பன்இருப்பது எவ்வளவு ஆசீர்வாதம்.

விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது வல்லமை வெளிப்படும்.ஜெபத்தின் வல்லமையினால் சுகமாகுதலையும், பிசாசின் கட்டுகள் முறிக்கப்படுவதையும், சோதனையின் நேரங்களில் சமாதானத்தையும் தந்து அற்புதமாய் தேவன் என்னை நடத்தி வருகின்றார்.மாறாத அநேக சூழ்நிலைகள் ஜெபத்தின் வல்லமையினால் மாற்றப்படுவதை நான் உணர்ந்திருக்கிறேன்.தேவனுடைய விசேஷித்த ஞானத்தின்மேல் விசுவாசம் வைத்து ஜெபிக்க வேண்டுமே தவிர பதில்களை மாத்திரம் நோக்கிக் கொண்டிருக்க கூடாது.தேவனை சார்ந்து அவருடைய வல்லமையை பெறும் தருணம் ஜெபநேரம்.நம்முடைய ஜெபத்தின் மூலமாகத்தான் தேவன் கிரியை செய்யமுடியும்.ஜெபத்தின் வல்லமை என்பது நம்மிடத்தில் இல்லை.அது தேவனுடைய இரக்கத்தில் உள்ளது.

ஜெபம் என்பது ஒழுங்கு செய்யப்பட்ட முறைமைகளைக் கொண்ட ஒரு காரியம் அல்ல. அனைத்து வேதாகம கோட்பாடுகளையும் தாண்டி, நம்முடைய தனிப்பட்ட ஜெபவாழ்வில் நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் நமக்குமான உணர்வுபூர்வ ஆவிக்குரிய காரியம். கோட்பாடுகளில் சிக்கிக்கொள்ளமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.மிக முக்கியமானது எதுவென்றால் ஜெபத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வது.

ஜெபத்தைக் குறித்து அநேக காரியங்களை நான் வாசித்து தெரிந்துகொண்டபோது மிகவும் ஆச்சரியப்பட்டதுண்டு.இந்த இதழில் ஜெபத்தைக் குறித்து வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள காரியங்களை அறியப் போகிறோம். என்னுடைய ஜெபம் என்னவென்றால் இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் அனுதினமும் ஜெபிப்பதை கடைபிடிக்கவேண்டும்.ஆவிக்குரிய வாழ்வில் ஜெயம்பெறவும், போராட்டங்கள், குடும்ப சூழ்நிலைகள் மற்றும் சபைக்கூட்டங்களில் இருக்கும் குழப்பங்கள் இவையெல்லாம் மாற ஜெபம் நமக்கு பெலன் தரும். தேவனுடைய கிருபையால் எல்லாம் மாறும்.எதிர்பார்ப்புடன் ஜெபிப்போம்.


ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org


## சாப்பிடும் நேரத்தில் ஜெபம்



வேதாகமத்தில் பல இடங்களில் இயேசு கிறிஸ்து போஜன பந்தியிருப்பதற்கு முன்பு ஜெபிப்பதை நாம் காணமுடிகிறது. சுவிசேஷங்களில் ஸ்தோத்திரம், ஆசீர்வாதம் என்கிற வார்த்தைகளைக் காணமுடிகிறது.வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டு சீஷர்களிடத்தில் கொடுத்தார் (மத் 14 : 19 ).இதிலே உற்சாகமான ஒரு விஷயம் என்னவென்றால் யூதர்களின் பழக்கமான அப்பத்தை ஆசீர்வதித்து ஸ்தோத்திரம் செய்யும் வழக்கத்தையே இயேசுகிறிஸ்துவும் பின்பற்றினார்.ஒவ்வொருமுறையும் புசித்தாலும் குடித்தாலும் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் சொல்வதை யூதர்கள் வழக்கமாய் கொண்டிருந்தனர்.

வழக்கமாய் சொல்வது யாதெனில் கர்த்தாவே எங்கள் பரமதகப்பனே அகிலத்திற்கும் ராஜாவே, இப்பூவுலகில் அப்பத்தை ஈந்து ஆசீர்வதியும் என்பதே.இதுவே காலப்போக்கில் நீர் தந்த ஆகாரத்திற்காக நன்றி என்று நாம் சொல்லும் வழக்கமாகி விட்டது.அப்போஸ்தலராகிய பவுல் அப்பத்தை எடுத்து, எல்லாருக்கும் முன்பாகவும் தேவனை ஸ்தோத்தரித்து, அதைப்பிட்டு புசிக்கத் தொடங்கினார் ( அப்போ 27 : 35 ). பொதுவான இடத்திலோ அல்லது தனிப்பட்ட போஜனத்தின்போதோ எப்படியாயினும் தேவனுக்கு நன்றி சொல்வது நம் கடமை.

# வேதபாட வழிகாட்டி

**பொருள் : ஜெபம்**



**வேத வாசிப்பு :** இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் - 1 தெச 5 : 17

**வரையறை :** ஜெபம் என்பது தேவனோடு பேசுவதும், உரையாடுவதும், ஜெபமானது அர்ப்பணிப்பு, தேவமகிமையை உணர்ந்து வெளிப்படுத்துதல் பாவங்களை அறிக்கையிடுதல், அவருடைய இரக்கத்தையும், மன்னிப்பையும் இரந்து வேண்டுதல், மற்றவர்களுடைய ஆசீர்வாதங்களுக்காக பரிந்து பேசுதல், ஸ்தோத்தரித்தல் இவையெல்லாவற்றையும் உள்ளடக்கியது (வெப்ஸ்டர் அகராதி, 1828).

**செய்திச் சுருக்கம் :** ஒவ்வொரு மனுஷர்களும் தங்களைக் குறித்த முழு பரிச்சயத்தோடு, தேவனோடு உறவு கொண்டிருப்பது முக்கியமானது. ஜெபம் என்கிற கருவியினால் தான் தேவனை துதிக்கவும், மகிமைப்படுத்தவும் முடியும். ஆவிக்குரிய கிருபைகளையும், இரட்சிப்பையும் பெற்றுக்கொள்ளகூடும். ஜெபம் என்பது பூமிக்கும், பரலோகத்திற்குமான மெல்லிய கயிறு, இதன்மூலமாக தேவ சித்தத்தை மனுக்குலம் அறிந்து கொள்ளகூடும். விசுவாசமுள்ள ஜெபத்தினால் எல்லாம் மாறும். வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வுக்கு ஜெபமே முக்கியமான மூலகாரணம்.

## I.ஜெபம் கட்டளையிடப்படுகிறது

- **A.** சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும். லூக் 18 : 1
- **B.** இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். கொலோ 4 : 2
- **C.** கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள். லூக் 11 : 9, 10

## II.நோக்கம் / மதிப்பு / ஜெபத்தின் வல்லமை

- **A.** தேவனோடு சஞ்சரித்தல் / உறவாடுதல். ஆதி 5 : 24 எரேமியா 29 : 11 - 13, யோவான் 15 : 5
- **B.** ஸ்தோத்தரி. சங் 103 : 1
- **C.** இரட்சிப்பு. அப்போ 2 : 21
- **D.** சுகமாகுதல். யாக் 5 : 13 - 16
- **E.** இரக்கம் / கிருபை. எபி 4 : 16
- **F.** ஞானம்.யாக் 1 : 5
- **G.** விசாரிக்கிறவர். 1 பேது 5 : 6,7 சங் 107 : 28 - 30
- **H.** சோதனைக்குட்படாதபடிக்கு. மத் 26 : 41

## III.எப்படி ஜெபிக்க வேண்டும்

- **A.** இயேசுவின் நாமத்தில். யோசுவா 16 : 23
- **B.** விசுவாசத்தில். எபி 11 : 6
- **C.** தாழ்மையில். யாக் 4 : 6
- **D.** ஆவியில். யூதா 1 : 20
- **E.** ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபம். பிலி 4 : 6
- **F.** வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். மத் 6 : 7 - 8

## IV.யாருடைய ஜெபத்தையெல்லாம் கர்த்தர் கேட்டு பதிலளிக்கிறார்

- **A.** தாழ்மையின் ஜெபம் / மனந்திரும்புதல். 2 நாளா 7 : 14
- **B.** விடுதலை வேண்டி ஜெபம். யோவேல் 2 :32, சங் 86 : 7
- **C.** நீதியும், கீழ்ப்படிதலும். யாக்கோபு5 : 16 1 பேது 3 : 12, 1 யோ 3 : 22
- **D.** விசுவாசமுள்ளவர்கள். எபி 11 : 6, மாற் 11 : 24
- **E.** அவருடைய சித்தத்தின்படி செய்கிறவர்கள். 1 யோவா 5 : 14 -15
- **F.** ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். ரோ 8 : 26 - 27

## V.யாருக்காகவெல்லாம் ஜெபிக்க வேண்டும்

- **A.** நமக்காக.சங் 55 : 16, 2 கொரி 12 : 8 - 10
- **B.** பரிசுத்தவான்கள் / தேவனுடைய ஊழியர்கள். 1 தெச 1 : 2, எபே 6 : 18 - 19, 2 தெச 3 : 1
- **C.** சுவிசேஷ ஆத்தும ஆதாய அறுவடைப் பணிசெய்கிறவர்களுக்கு. லூக் 10 : 2
- **D.** இரட்சிக்கப்படாதவர்களுக்காக. ரோம 10 : 1
- **E.** சத்துருக்களுக்காக. மத் 5 : 44
- **F.** தேசங்களுக்காக / அதிகாரமுள்ள யாவருக்காகவும். 1 தீமோ 2 : 1 - 3

## VI.ஜெபத்திற்கு ஏற்படும் தடைகள்

- **A.** பாவம். நீதி 15 : 29, யோவான் 9 : 31
- **B.** தகாதவிதமான விண்ணப்பம். யாக் 4 : 3
- **C.** மன்னியாமலிருப்பது. மாற் 11 : 25 - 26
- **D.** சுயநீதி. லூக் 18 : 9 -14
- **E.** விவாகபேதங்கள். 1 பேது 3 : 7

## VII.எங்கே ஜெபிக்க வேண்டும்

- **A.** தனி ஜெபம். மத் 6 : 5 - 6, மத் 14 : 23
- **B.** பொதுவான குழு, ஜெபக்கூட்டம். அப்போ 4 : 31, அப்போ 12 : 5, 12

## VIII.ஜெபிக்கிறவர்களுக்கான வாக்குத்தத்தங்கள்

- **A.** கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும். மத் 7 : 7 - 8
- **B.** இரண்டுபேர் ஒருமனப்பட்டு ஜெபித்தால். மத் 18 : 19
- **C.** நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். யோவா 15 : 7


**முடிவு :**

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ள வர்களாயிருங்கள். 1 பேது 4 : 7

# ஜெபம் எனும் கோட்பாடு

## சிருஷ்டிகருடன் ஐக்கியப்படுவதற்கான அழைப்பு

**ஜெபம் என்பது தேவனோடு நாம் கொண்டுள்ள உறவின் பிரதிபலிப்பே ஆகும். எந்த சூழ்நிலையானாலும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் தேவனுடைய மகிமையை உணர்ந்து ஜெபிக்க முடிவதே ஆச்சரியமான ஒன்று.ஜெபம் என்பது தேவனிடத்தில் விண்ணப்பங்களை செலுத்துகிற நேரம் மாத்திரமல்ல, மாறாக ஆவிக்குரிய கனமும், மகிமையும் கர்த்தருக்கு செலுத்துகிற தருணம் அது.**



### கிறிஸ்துவால் அறிவுறுத்தப்பட்டது

சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் (லூக் 18 : 1) என்று இயேசு கூறுகிறார். மேலும் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள் (கொலோ 4 : 2). மனுக்குலத்தோடு நெருங்கிய உறவுகொள்ளவே கர்த்தர் விரும்புகிறார். ஆகவே முழுமையாக அவருடைய ஐக்கியத்திலே பரிபூரணப்பட நாம் அதிகமாக ஜெப நேரத்தை செலவிட வேண்டும். ஏனோக்கைப் போல் அனுதினமும் தேவனோடு சஞ்சரிப்பதையே அவர் விரும்புகிறார்.திராட்சகொடியானது செடியில் நிலைத்திருப்பது போல் என்னில் நிலைத்திருங்கள் என்று தம் சீஷர்களுக்கு கூறுகிறார்.ஆவிக்குரிய மிகுந்த கனிகளைக் கொடுக்க கிறிஸ்துவில் நிலைத்திருக்கச் செய்வது ஜெபம் மாத்திரமே.யாக் 4 : 8ல் தேவனிடத்தில் சேருங்கள்.அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் என்று சொல்லப்பட்டுள்ளது.

**நம்முடைய இருதயம் தேவனுக்குச் செலுத்தும் துதிகளாலும் நன்றிபலிகளாலும் நிறைந்திருக்கும் போது, நம்முடைய உதடுகளினால் அதை அறிவிக்க வேண்டும்**

### ஊக்கமான இதயப்பூர்வமான ஆராதனை

உண்மையான ஜெபம் என்பது மனப்பாடம் செய்த வசனங்களைவிட மேலானது. இரட்சகரை உள்ளான இதயத்திலிருந்து தேட வேண்டும். நீங்கள் கூடிவந்து, என்னை தொழுதுகொண்டு, செவி கொடுப்பேன் (எரே 29 : 12-13).ஜெபநேரம் என்பது தேவனைத் துதிக்கவும், தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்து வதற்குமான நேரம்.தேவனுக்கு கீழ்ப்படிந்து, நம்முடைய இருதயமும், மனமும் தேவ சத்தத்தை கேட்டு, நடக்க வழி கிடைக்கும்.

### கதவைத் திறக்கும் திறவுகோல்

ஜெபத்தின் வல்லமையை நாம் சாதாரணமாக நினைத்து விடகூடாது.பல ஜெபங்கள் முடியாதவற்றையும் சாத்தியமாக்கி இருக்கின்றன. கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற வனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் (அப்போ 2 : 21). விண்ணப்பத்தோடும், வேண்டுதலோடும் ஜெபிக்கும்போது இயற்கைக்கு அப்பாற்பட்ட சுகமாகுதலை கூட நாம் ஜெபித்தால் பெற்றுக் கொள்ள முடியும். உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்.அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் (யாக் 5 : 14-15). ஜெபமானது அநேக இடங்களில் அசைவை உண்டாக்கும் மாற்றங்களை ஏற்படுத்தி யிருக்கிறது. இந்த சந்ததியினரும்கூட தொடர்ந்து பல காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

### என்னிடத்தில் வாருங்கள்

வாழ்வின் துன்ப, துயரங்கள், பிரச்சனைகள், போராட்டங்களினின்று விடுதலை பெற என்னிடத்தில் வாருங்கள் என்று தேவன் நம்மை அழைக்கிறார்.ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபி 4 : 16).தேவையோடிருக்கும் ஜனங்கள்மேல் அவருடைய கிருபை ஊற்றப்பட வேண்டி உருக்கமான ஜெபம்.அவர் உங்களை விசாரிக்கிற வரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் (1 பேது 5 : 6-7).

சங் 107 : 28-30 எவ்வளவாய் அவர் நமக்கு உதவிசெய்கிறார் என்று அழகாக விவரிக்கப் பட்டுள்ளது. தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்.அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார்.கொந்தளிப்பை அமர்த்துகிறார். அதின் அலைகள் அடங்குகின்றது.அமைதலுண் டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப் படுகிறார்கள்;தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்.

### இருவழி தொடர்பு

ஜெபம் என்பது ஒருவழி தொடர்பு அல்ல.அமைதியான, சமாதானமான நிலையில் நம்முடைய இருதயம் தேவனோடு இடைபடுவது. ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் ஜெபித்து அந்த நாளை ஆரம்பிப்பது நம்மை வலிமைப் படுத்துகிறது. அநேக வேதாகம ஆராய்ச்சிகளிலும் கூட ஜெபமானது நமது மனஅழுத்தங்களையும், பயத்தையும் குறைத்து நேர்மறையான எண்ணங்களைத் தருகிறது.

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனா யிருந்தால்...தேவனிடத்தில் கேட்கக்கடவன் (யாக் 1 : 5).நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் (மத் 26 : 41). எதிரியான பிசாசானவனை எதிர்கொள்ளும் வலிமை நமக்குத் தருவது ஜெபமே.

### எப்படி ஜெபிக்க வேண்டும்

எப்படி நாம் ஜெபிக்க வேண்டும் என்று வேதாகமத்திலே கட்டளைகளாக கூறப்பட்டுள்ளது.



**ஜெபமானது மற்றவர்களை திருப்திபடுத்தும் விதமாகவோ, பார்வைக்கு நீண்டநேரம் ஜெபிப்பதையோ தவிர்க்கவும், ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார்**

கிறிஸ்தவர்கள் இயேசுவின் நாமத்தினாலே ஜெபிக்கவேண்டும் (யோவா 16 : 23).இயேசுவின் நாமத்தைச் சொல்லி பயபக்தியுடனும், அதிகாரத்துடனும் தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும்.ஒவ்வொருவரும் விசுவாசத்தில் தேறினவர்களாய் அவரைத் தேட வேண்டும்.அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவ ரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபி 11 : 6). தாழ்மையான ஜெபத்தை கர்த்தர் ஏற்றுக் கொள்கிறார் (யாக் 4 : 6).பெருமையற்ற, சுயநீதி யற்ற ஜெபம். உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினால் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (பிலி 4 : 6). இயேசு தம் சீஷர்களுக்கும் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கும், வீண்வார்த்தைகளை அலப்பாமல் ஜெபிக்க சொன்னார் (மத் 6 : 7-8). நாம் வேண்டிக்கொள்வதற்கு முன்பதாகவே நம் தேவைகளை அறிந்திருக்கிற நம் தேவன். ஜெபமானது மற்றவர்களை திருப்திபடுத்தும் விதமாகவோ, பார்வைக்கு நீண்டநேரம் ஜெபிப்பதையோ தவிர்க்கவும்,ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான் களுக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோம 8 : 26 -27).

### யாருடைய ஜெபத்தை கர்த்தர் கேட்கிறார்

வேதாகமத்திலே பல இடங்களில் பலதரப்பட்ட ஜனங்களின் சூழ்நிலைகளிலே தேவன் எவ்வாறு ஜெபத்திற்கு பதில்கொடுத்தார் என்று காண முடிகிறது.என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, மனந் திரும்பினால் நான் அவர்கள் மன்றாட்டை கவனிப்பேன் (2நாளா 7 : 14).கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவ னெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்(யோவேல் 2 : 32) .நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ள தாயிருக்கிறது (யாக் 5 : 16). அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாக பிரியமானவைகளைச் செய்கிற படியினால் நாம் வேண்டிக்கொள்வதை பெற்றுக் கொள்ளமுடியும் (1 யோவா 3 : 22). விசுவாசியுங்கள். பெற்றுக்கொள்வீர்கள் (மாற் 11 : 24).அவருடைய சித்தத்தின்படி செய்தால் அவர் செவிகொடுக்கிறார்(1 யோ 5 : 14-15).

### ஊக்கமான ஜெபங்கள்

ஊக்கமான ஜெபத்திற்கு சிலவேளை தடைகள் வரலாம்.யோவான் 9 : 31 சொல்கிறது பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லை யென்று அறிந்திருக்கிறோம்.மேலும் நீதி15: 29 துன்மார்க்கனுக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார். நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார். நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக்கொள்ளாம லிருக்கிறீர்கள் (யாக் 4 : 3).மன்னிக்கும் குணம் நம்மிடம் இல்லை (மாற் 11 : 25-26). அல்லது சுயநீதி (லூக் 18 : 9-14).இதுதான் நம் ஜெபங் களுக்கு தடை.மேலும் குடும்ப பிரச்சனை, சமாதானமின்மை இவைகளும் ஜெபத்திற்கு தடையே.புருஷர்களே உங்கள் மனைவிக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள் (1 பேது 3 : 7).

### ஜெபம்

வேதாகமத்திலே பல தனிஜெபங்களையும், கூட்டு ஜெபங்களையும் காணமுடிகிறது.தேவன் அவர்தம் பிதாவினுடைய வல்லமையை பெற்றுக்கொள்ளும்படியாக அநேகந்தரம் தனித்து ஜெபித்ததை காணமுடிகிறது. சில தேவைகள் சந்திக்கும்படியாக குழுவாக சேர்ந்து தேவபிள்ளைகள் ஜெபித்து பிதாவாகிய தேவனுக்கு முன்பாக ஒருமனப்படுகிறார்கள். இதுமாதிரியான கூட்டங்களில் ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கு வல்லமை உண்டு.அதேசமயம் தனிஜெபம் என்பது தனிப்பட்ட நம் உள்ள குமுறல்களை தேவனிடத்தில் அறிக்கையிடும் நேரம்.பொதுஜெபங்களில் கேட்கிற ஜனங்களுக்கு ஜெபக்குறிப்பின் முக்கியத்துவம் தெரிவிக்கப்பட வேண்டும்.

### எப்போது ஜெபிக்க வேண்டும்

வரலாற்றிலே யூதர்கள் ஜெபிப்பதற்கான இரண்டு வேளைகள் உண்டு.பகல் மற்றும் இரவு.சிலர் மதியமும் ஜெபிப்பார்கள்.தானியேல் தினம் மூன்றுவேளை ஜெபித்தார்(தானி 6 : 10). புதிய ஏற்பாட்டிலே ஜெபிக்கும் நேரம் என்று சொல்லப்படவில்லை.ஆனால் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும் (1 தெச 5 : 17) என்று சொல்லப்பட்டுள்ளது. தேவபிள்ளையான நாம் ஆவியில் அனலுள்ளவர்களாய், தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.அதனால் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி, தேவனைத் தேட வேண்டும்.ஆகவே தினமும் காலையில் எழுந்ததும், பின் இரவு நித்திரைக்கு செல்லும் முன்பதாகவும் ஜெபிக்க வேண்டும்.இடைவிடாத அயராத ஜெபமும், அர்ப்பணிப்பும்தான் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற்றத்தை தரமுடியும்.

### விழித்திருந்து ஜெபிக்க வேண்டும்

ஜெபம் என்பது தேவனோடு உள்ள உறவு.அந்த ஐக்கியத்தின் மூலம் ஆவியும், ஆத்துமாவும் ஒவ்வொரு நாளும் உற்சாகமடையும்.ஏனெனில் ஜெபத்திற்கு வல்லமை அதிகம். அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு எழுதுகிறார் எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்.

## ஜெபத்தின் வகைகள்

**அர்ப்பணிப்பு**

(தேவனை துதித்தல்)

**வருந்துதல்**

(மன்னிப்பு கேட்பது)

**விண்ணப்பம்**

(தேவசித்தம் கேட்பது)

**பரிந்துபேசுதல்**

(மற்றவர்களுக்கான வேண்டுதல்)

**ஸ்தோத்தரித்தல்**

(நன்றி செலுத்துதல்)

# கேள்வி பதில்

## தனி ஜெப மொழியை / பாஷையை குறித்து வேதத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது?

வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சத்தியத்தின்படி மாத்திரமே நாம் நடந்து கொள்ள வேண்டும். மாறாக அனுபவ ரீதியான அறிவுரைகள் ஏற்கத்தக்கதல்ல, தனி ஜெபத்திற்கான பாஷை என்று எதுவும் சொல்லப்படவில்லை. இயேசுகிறிஸ்து தாமே சொல்லி பின்பற்றிய கர்த்தருடைய ஜெபத்தை விட மேலான ஒன்றுண்டா? (மத் 6 : 9 – 13).

## சரியான ஜெபநிலை எது?

மாம்சீக ரீதியாக ஜெபிப்பதற்கான சரியான நிலை என்று ஒன்றும் இல்லை.யூதர்கள் வழக்கமாக நின்று கொண்டு ஜெபிப்பார்கள். அன்னாள் ஜெபஆலயத்திலே கர்ப்பத்தின் கனிக்காக வேண்டி நின்று ஜெபித்தாள் (1 சாமு 1 : 26).இயேசு கூறுகிறார் நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது...மன்னியுங்கள் (மாற்கு 11 : 25).

முழங்காற்படியிட்டு ஜெபித்தல் என்பது சிறப்பு அறிக்கைகள் ஏறெடுக்கும் நேரத்தில் செய்தல் .தானியேல் தினம் மூன்றுவேளை முழங்காற்படியிட்டு ஜெபித்தார் (தானி 6 : 10). சாலமோன் ராஜா முழங்காற்படியிட்டு ஜெபித்தார்(1 ராஜா 8 : 54).எஸ்றா இருதய பாரத்தினால் தேவனுக்கு முன்பதாக முழங்காற்படியிட்டான் (எஸ்றா 9 : 5). தாவீது கூறுகிறார் நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள் (சங் 95 : 6). புதிய ஏற்பாட்டிலே தேவனுடைய பரிசுத்தவான்கள் அப்போ 21 : 5 மற்றும் அப்போஸ்தலராகிய பவுல் ஜெபிக்கும்படி முழங்காற்படியிட்டதை அப் 20 : 36ல் காணலாம்.

பழைய ஏற்பாட்டிலே, பல சூழ்நிலைகளில், பாரமான, நெருக்கமான வேளையில், பலர் தலைதாழ்த்தி தரைமட்டும் குனிந்து ஜெபிப்பதை காணமுடிகிறது. எலியா தரைமட்டும் பணிந்து தன் முகம் தன் முழங்காலில்பட குனிந்து ஜெபித்தார் (1 ராஜா 18 : 42). எஸ்றாவும் ஜனங்களும் குனிந்து, முகங்குப்புற விழுந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள் (நெகே 8 : 6) .கெத்சமனே தோட்டத்தில் நம் பரமன் இயேசு முகங்குப்புற விழுந்து, தம் பிதாவை வேண்டிக்கொண்டார் (மத் 26 : 39).

வசனத்தின் அடிப்படையில் ஜெபிக்க பல நிலைகள் இருந்தாலும், நாம் முழங்காற்படியிட்டு ஜெபிக்கும் நிலையை கைக்கொள்கிறோம். எந்த நேரத்திலும் நம்முடைய ஜெபநேரமாக இருந்தாலும் தேவனுக்கு செலுத்த வேண்டிய கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரபலியையும் செலுத்த வேண்டும். நாம் நடக்கும்போதும், வாகனத்தை ஓட்டும்போதும், படுக்கும்போதும் ஜெபித்துக்கொண்டே இருப்பது ஆசீர்வாதம். ஆனால் ஒரு தேவனுடைய பிள்ளை சோம்பேறியாக இருக்க கூடாது. தேவனை ஆராதிக்கவும், ஜெபிக்கவும் சரியான நேரத்தை கடைபிடிக்க வேண்டும்.

புருஷர்கள் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன் (1 தீமோ 2 : 8) என்று புதிய ஏற்பாட்டிலே சொல்லப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலும் கூட பல இடங்களில் கைகளை உயர்த்தி தேவனை துதிப்பதையும், ஜெபிப்பதையும் பார்க்கலாம். கைகளை உயர்த்தி சில சிறப்பு ஜெபக்குறிப்புகளுக்கு நாம் ஜெபிப்பதை பொதுவாகக் காணலாம்.

ஜனங்கள் அடிக்கடி 1 கொரி 14 : 14 ஐ தியானிப்பதுண்டு. நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும் அதாவது கேட்கிறவர்களுக்குப் புரியாதபடி இருக்கும் ஒரு ஜெபம் அந்நிய பாஷை என்று சொல்லப்படுகிறது. இது உளர்தல் என்று பொருளல்ல. இப்போது யாராவது அந்நியபாஷையில் ஜெபித்தால் ஜெபம் அர்த்தமுள்ளது தான் ஆனால் அந்த அறையில் இருக்கும் மற்றவர்களால் அதை புரிந்து கொள்ள முடியாது அதன் கருத்து கேட்பவர்களுக்கு பயனற்றதும், புரிந்து கொள்ளாமல் குழப்பத்தை ஏற்படுத்தும் விதமாக இருக்கும். வசனம் 15 ல் இப்படியிருக்க செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்.

ஆம் இயேசு கிறிஸ்து மத்தேயு 6 : 7 ல் சொன்னதுபோல அஞ்ஞானிகளைப்போல் வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், நம்முடைய ஜெபமானது சுருக்கமாகவும், புரிந்து கொள்ளக்கூடியதாகவும், உள்ளத்தின் ஆழத்திலிருந்தம் செய்யப்பட வேண்டும். அந்நிய பாஷையைக் குறித்து மேலும் விவரங்கள் அறிய காஸ்பெல் ட்ரூத் 9ஐ பார்க்கவும்.

## எவ்வளவு நேரம் ஒருவர் ஜெபிக்க வேண்டும்?

ஜெபவேளை என்று குறிப்பிட்ட ஒரு நேரம் ஒதுக்கப்படவில்லை.இயேசு கற்பித்த மாதிரி ஜெபமான கர்த்தருடைய ஜெபம் 30 நொடிகளுக்கும் குறைவான நேரமே.இயேசுவின் நாட்களில் அவர் இராமுழுவதும் ஜெபித்தபோது, மற்றவர்கள் குறுகிய நேரமே ஜெபித்தார்கள். அதுபோலதான் ஒருசில ஜனங்கள் போதுமான அளவு ஜெபிப்பதில்லை. இன்னும் சிலரோ மற்ற கடமைகளையும் மறந்து பலமணிநேரம் ஜெபத்துக்கொண்டேயிருப்பர்.இவ்வாறான பல்வேறுபட்ட ஜெபநேரங்களையே மனுஷர்களாகிய நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்.தனிப்பட்ட ஒரு நபரின் குடும்ப சூழ்நிலை, இதயபாரம், மனவேதனை இதுபோன்ற பிரச்சனைகள் ஒரு மனுஷனுடைய ஜெபநேரத்தை அதிகமாக்குகின்றது.அதேசமயம் பொதுவான ஜெபக்கூட்டங்களில் மிக நீண்டதாய் ஜெபக்குறிப்புகள் தரப்பட முடியாது.எல்லாவற்றிலும் மிக முக்கியமானது யாதெனில் தேவனை கனப்படுத்தி, துதிசெலுத்தி அவரோடு தொடர்பில் இருப்பதே.பல ஜனங்கள் ஜெபிப்பதையே மறந்துபோய்விட்ட இந்த காலகட்டத்தில் போராடி ஜெபிக்கும் நபர்களை பார்ப்பதே அரிது.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
**TAMIL EDITION -
FOR PRIVATE CIRCULATION ONLY**





உங்களுக்குத் தெரியுமா?

*ஜெபமாலை உபயோகப்படுத்தி சில ஜெபங்களை தொடர்ந்து சொல்லும் வழக்கம் எல்லா மார்க்கங்களிலும் இருந்து வருகிறது. பீட் என்கிற ஆங்கில வார்த்தை பழைய ஆங்கில வார்த்தையான பெடி என்பதலிருந்து வந்தது.36 நூற்றாண்டுகளுக்கு முன் ரோம பேரரசின் மத நாகரிகத்தின் காலக்கட்டத்தில் அவர்களால் ஜெபமாலை கலாச்சாரம் பின்பற்றப்பட்டது. இது கிறிஸ்துவுக்கு முன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது*

*இயேசு தம் சீஷர்களுக்கு அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை சொல்லி ஜெபிக்க வேண்டாம் என்று போதித்தார். ஜெபம் என்பது இதயம் திறந்த மன்றாட்டு அதிலே மனப்பாடம் செய்து ஒப்புவிக்கவோ, திரும்ப திரும்ப சொல்லவோ ஒன்றுமில்லை. ஆகவே ஜெபமாலை உபயோகித்தல் கிறிஸ்துவின் போதனையல்ல.*

*ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை*

# யாபேசின் ஜெபம்

யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி; தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையை பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கி காத்தருளும் என்று வேண்டிக் கொண்டான்; அவன் வேண்டிக் கொண்டதைத் தேவன் அருளினார் 1நாளா 4 : 10.

தேவன் பதில் கொடுத்த யாபேசின் சுருக்கமான ஆழமான, வல்வமையுள்ள ஜெபத்தைத்தான் இங்கு பார்க்கிறோம். யாபேஸ் தம்மை ஆசீர்வதிக்க வேண்டி ஜெபித்தான். ஆம் நாமும் கூட தேவன் நம்மை ஆசீர்வதித்ததினால் தான் இம்மட்டும் ஜீவனோடு நிலைநிற்கிறோம். இல்லையென்றால் என்றோ நம் ஜீவனை இழந்திருப்போம். நம்மையோ, நம்மைச் சுற்றியிருக்கிற மற்றவர்களை நம்பாமல், தேவன் பேரில் பற்றுதலாய் இருந்து, அவரை நோக்கிப் பார்த்து, உதவி கேட்பது எவ்வளவு பாக்கியம், மற்றவர்கள் உதவி செய்ய தவறுவார்கள். ஆனால் கர்த்தரோ மாறாதவர்.

ஆவிக்குரிய வாழ்வில் வளரச் செய்யும் இன்னும் அதிக கிருபையை தந்து வளரச்செய்வார்.

கர்த்தாவே உம்முடைய கரத்தால் என் வாழ்வை தொடுவீரா? என்னால் எதையும் செய்ய இயலாது. என்னை தாழ்த்தி உம்முடைய இரக்கத்தை வேண்டுகிறேன். வழிகாட்டும் உம்முடைய ஞானத்தை தாரும். உம்முடைய அபிஷேகத்தால் என்னை நிரப்பும்

## சிறப்பான ஜெபங்கள்

**கர்த்தருடைய ஜெபம்**
மத் 6 : 9 -13

**இரட்சிப்புக்கான யோனாவின் ஜெபம்**
யோனா 2 : 2 – 9

**சுகமாக்குதலுக்கான எசேக்கியாவின் ஜெபம்**
2ராஜா 20 : 1 – 5

**சாலமோனுடைய அர்ப்பணிப்பின் ஜெபம்**
1ராஜா 8 : 22 – 53

**யோசுவா பிரதான ஆசாரியர்**
நெகே 9 : 5 – 38

**யாபேசின் ஜெபம்**
1 நாளா 4 : 10

பிதாவே, தீங்கான காரியங்கள் என்னை அழித்துவிடாமல் பாதுகாத்து கொள்ளும் உம்முடைய ஆவியின்படி நான் நடக்க உதவும். என் சுயநீதியை சாராமல், குருட்டாட்டமான என் கண்களைத் திறந்து நான் ஆவிக்குரிய பார்வையடையச் செய்யும், எதிரிகளின் தந்திரத்தை எனக்கு காட்டும். தவறான இந்த உலகத்தின் இச்சைகளுக்கு என்னை ஒப்புகொடுத்துவிடாமல் காத்துக்கொள்ளும் தேவனே, நீர் காட்டிய வழி பரலோகத்திற்கு செல்லும் ஒரே வழி, ஆகையால் என் ஆத்துமாவை பாவத்திற்கு விலக்கி காத்துக்கொள்ளும்.

கர்த்தர் நம் ஜெபத்தை கேட்டார் நம்முடைய ஜெபத்தின்படி வேண்டிக்கொண்டவைகளை அருளிச் செய்தார். கர்த்தர் இன்று நமக்காக செய்துவிட்டார். நன்றி கர்த்தாவே தைரியமாயிருங்கள், தொடர்ந்து நாம் ஜெபிக்கலாம்.

**CONTACT :-**

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

**Email :**
**editor@thegospeltruth.org**

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**THE CHURCH OF GOD** *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi-Taluk - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - தாலுகா - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த ஆலயத்திற்கும் செல்லாமல் இருப்பவர்களை எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with us on Real Truth Phone (போன்) : 9597562641**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316